தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 9 திகதி: 21/11/2020

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு.ச.தேவராசா

மாணவர் பெயர்: ____________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 10 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 10 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.**

1. படி (பெயர்) ______________________________

______________________________

படி (வினை) ______________________________

______________________________

2. புளி (பெயர்) ______________________________

______________________________

புளி (வினை) ______________________________

______________________________

3. தை (பெயர்) ______________________________

______________________________

தை (வினை) ______________________________

______________________________

4. களி (பெயர்) ______________________________

______________________________

களி (வினை) ______________________________

______________________________

5. பணி (பெயர்) ______________________________

______________________________

பணி (வினை) ______________________________

______________________________

6. விழி (பெயர்) ____________________________________________

________________________________________________________________

விழி (வினை) ____________________________________________

________________________________________________________________

7. வழி (பெயர்) ____________________________________________

________________________________________________________________

வழி (வினை) ____________________________________________

________________________________________________________________

8. ஓடு (பெயர்) ____________________________________________

________________________________________________________________

ஓடு (வினை) ____________________________________________

________________________________________________________________

9. பார் (பெயர்) ____________________________________________

________________________________________________________________

பார் (வினை) ____________________________________________

________________________________________________________________

10. ஆடு (பெயர்) ____________________________________________

________________________________________________________________

ஆடு (வினை) ____________________________________________

________________________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் அகழ்வாராய்ச்சி அல்லது புதைபொருளாராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நிலத்தை அகழ்ந்து நிலத்திற்கு அடியில் மறைந்திருக்கின்ற பொருட்களை எடுத்து ஆராய்ச்சி செய்வதனால் அகழ்வாராய்ச்சி என்றும், பூமிக்குள் புதைந்திருக்கும் பொருட்களை எடுத்து ஆராய்ச்சி செய்வதனால் புதைபொருளாராய்ச்சி என்றும் கூறப்படுகின்றது. சில வருடங்களுக்கு முன்பு தமிழ் நாட்டிலுள்ள மதுரைக்குப் பக்கத்தில் உள்ள கீழடி என்னும் ஊரில் ஒருவர் வீடு கட்டுவதற்காக நிலத்தைத் தோண்டிய போது பல்வேறு பொருட்களைக் கண்டார். இதனைப்பற்றி புதைபொருளாராய்ச்சித் திணைக்களத்திற்கு அறிவித்தார். அவர்கள் அந்த இடத்திலும், அதைச் சுற்றிவர உள்ள இடங்களிலும் அகழ்ந்தபோது 2600 வருடங்களுக்கு முன்பு அங்கே வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய களிமண்ணால் செய்த சட்டி, பானை போன்ற பாத்திரங்களும், வேறு பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. தமிழ் மக்கள் செங்கல்லைப் பயன்படுத்தி வீடு கட்டி வாழ்ந்தனர் என்பதையும், பயன்படுத்திய நீரை வெளியேற்றுவதற்கு சிறந்த வடிகால் அமைப்பைப் பயன்படுத்தினார்கள் என்பதையும் கண்டுபிடித்தனர். மிகப் பழைய காலத்திலேயே தமிழ் மக்கள் சிறந்த நாகரிகத்தைக் கொண்டவர்களாக வாழ்ந்தனர் என்பதை வைகை நதிக்கரையில் கீழடி என்னும் கிராமத்தில் நடைபெற்ற புதைபொருளாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் எடுத்துக்காட்டுகின்றன. இப்போதும் இங்கே அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மக்கள் ஆரம்பத்தில் தமது நீர்த் தேவைக்காகவும், உணவுத் தேவைக்காகவும் நதிக்கரையோரங்களில் குடியேறினர். குளிப்பதற்கும், குடிப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் நதி நீரைப்பயன்படுத்தினர். விவசாயம் செய்ததன் மூலமாகவும், மீன் பிடித்தல் மூலமாகவும் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தனர். இவ்வாறு நதிக் கரையோரங்களில் மக்கள் வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்ற போது மழைவீழ்ச்சி அதிகமாகி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அந்தக் கிராமங்களை மணல் மூடி நிலத்துக்கடியில் அந்த நாகரிகம் மறைந்து போயுள்ளது.

நேற்றைய நிகழ்வு இன்றைய வரலாறு (HISTORY) புதைபொருளாராய்ச்சிகள் மிகப் பழைய வரலாற்றை எமக்கு எடுத்துக் காட்டியுள்ளன. முன்பு இந்திய உபகண்டத்தில் அமைந்து இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்த பின்பு பாகிஸ்தானுக்குச் சொந்தமான சிந்து நதிக்கரையோரத்தில் பல வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது

சிந்துசமவெளி நாகரிகம் கண்டறியப்பட்டது. சீனாவிலுள்ள யாங்கிசிக்கியாங் நதிக்கரையோரத்தில் சீனநாகரிகமும், மெசப்பொத்தேமியாவில் (தற்போதைய ஈராக்) உள்ள யூபிரதீஸ் தைகிரீஸ் நதிக்கரையில் மெசப்பொத்தேமியா நாகரிகமும், எகிப்திலுள்ள நைல் நதிக்கரையோரத்தில் எகிப்திய நாகரிகமும் கண்டறியப்பட்டது. மேற்படி நாகரிகங்களுடன் ஒப்பிடும்போது கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட வைகை நதிக்கரை நாகரிகம் தமிழ் மக்கள் மிகப்பழைய காலத்திலேயே சிறந்த நாகரிகத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகின்றது. இது தமிழ்மக்கள் எல்லோருக்கும் பெருமையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் விடயமாகும்.

1. நிலத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்வதற்கு அகழ்வாராய்ச்சி, புதைபொருளாராய்ச்சி என்ற பெயர்கள் அமைந்தமைக்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

2. அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம் எது? அது எங்கே கண்டுபிடிக்கப்பட்டது? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. அந்த இடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சி 2600 வருடங்களுக்கு முன்பு தமிழ் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை உலகத்திற்கு உணர்த்தியது? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4. பல வருடங்களுக்கு முன்பு நதிக்கரையோரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகங்களை வரிசைப்படுத்தி, அந்த நதிகளையும் எழுதுக. (4 புள்ளிகள்)

| | நாகரிகம் | நதி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5. இலங்கை, இந்தியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் அவுஸ்திரேலியாவில் அவை நடைபெறுவதில்லை. அதற்குரிய காரணங்கள் எவையாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? (4 புள்ளிகள்)

____________________

____________________

____________________

____________________

____________________

- BLANK PAGE -

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

கடந்த வருடம் டிசம்பரில் நீண்ட விடுமுறையின் போது கனடாவில் வசிக்கின்ற எனது மாமா குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக கனடாவுக்குச் சென்றோம். மாமா, மாமி, மைத்துனி, மைத்துனர் ஆகியோருடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்தோம். மாமா எங்களைப் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்றார். கனடாவில் அப்போது கோடைகாலம் நிலவியமையால் கடற்கரைகள், பூங்காக்கள், உறவினர் வீடுகள் என்று தினமும் ஏதாவது ஒரு இடத்திற்குச் சென்றுவந்தோம். உலக அதிசயங்களில் ஒன்றான கனடா, அமெரிக்கா எல்லையில் அமைந்துள்ள நயகரா நீர்வீழ்ச்சியின் அழகை இயந்திரப்படகில் அதன் அருகில் சென்று ரசிக்கவேண்டும், அழைத்துச் செல்வீர்களா? என்று மாமாவிடம் கேட்டேன். அம்மா குறுக்கிட்டு படகில் செல்வது ஆபத்தானது, வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு என்றார். அவுஸ்திரேலியாவிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள், பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். இயந்திரப்படகை வாடகைக்கு எடுக்கலாம். எனது நண்பர் இயந்திரப்படகைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கின்றார். அவரையும் அழைத்துக் கொண்டு அடுத்தவாரம் செல்வோம் என்று மாமா கூறினார். அந்த நாளும் வந்தது. எல்லோரும் மாமாவினதும், மாமாவின் நண்பரினதும் வாகனங்களில் ஏறி நயகரா நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடத்திற்குச் சென்றோம். இயந்திரப்படகை வாடகைக்கு எடுத்தோம். மாமாவின் நண்பர் இயந்திரப்படகைச் செலுத்தினார். நீரைக் கிழித்துக் கொண்டு நீர்வீழ்ச்சியை நோக்கிப் படகு பாய்ந்துசென்றது. பேரிரைச்சலுடன் மிகவும் உயரமான இடத்திலிருந்து நீர் கொட்டுவதை ஆச்சரியத்துடன் பார்த்தோம். மாமாவின் நண்பர் படகின் வேகத்தைக் குறைத்து நீர்வீழ்ச்சியின் அருகில் சென்று அந்த அற்புதமான காட்சியை ரசிக்க வைத்தார். பின்பு அந்த இடத்திலிருந்து திரும்புவதற்காகப் படகின் வேகத்தை அதிகரிக்க முயன்றபோது படகின் இயந்திரம் படார் என்ற சத்தத்துடன் நின்றுவிட்டது. நீர் வீழ்ச்சியிலிருந்து கொட்டுகின்ற நீரின் வேகத்தினால் படகு தத்தளித்தது. படகு கவிழ்ந்து விடுமோ என்ற அச்சத்தினால் எல்லோரும் கலக்கத்துடன் இருந்தோம்..............

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தொடர்வாக்கியத்திலுள்ள 15 தனி வாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.**

நாங்கள் அவுஸ்திரேலிய மருத்துவ நிதியத்தின் முத்தமிழ்மாலை நிகழ்ச்சிக்குச் சென்றபோது ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய மாணவர்கள் தமிழ் மொழி வாழ்த்து பாடிக் கொண்டிருக்க மண்டபம் நிறைய மக்கள் இருந்தமையால் பின்வரிசையில் இருந்த ஆசனங்களில் அமர்ந்த பின்னர் இருவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் அறிவிப்புகளைக் கூறியதைத் தொடர்ந்து எட்டுச் சிறுமிகளின் பரதநாட்டியம் நடைபெற்று முடிந்த பின்பு மிருதங்கம், வயலின் ஆகிய பக்க வாத்தியங்களுடன் சங்கீதக் கச்சேரி இடம்பெற்றதும் இருபது நிமிடங்கள் இடைவேளை விடப்பட்டபோது அப்பா சிற்றுண்டி வகைகளையும், பலுடாவையும் வாங்கித்தர நாங்கள் அவற்றை உண்டபிறகு எல்லோரையும் இருக்கைகளில் அமருமாறு அறிவிப்பாளர் கூற சிற்றுண்டிச்சாலையில் நின்றவர்கள் அனைவரும் இருக்கைகளில் உட்கார்ந்ததைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய மாணவர்களின் கடாரம் வென்ற சோழன் நாடகம் மேடையேறி சபையோரின் பலத்த கரகோசங்களைப் பெற்றதும் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவடைய பத்துமணிக்கு நாங்கள் வீடு திரும்பினோம்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

சமூக மொழிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர் ஒருவருக்கு வருடத்திற்கு 135 டொலர்களை நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் உதவிப்பணமாக வழங்கி வருகின்றது. எமது ஹோம்புஷ் தமிழ்ப்பாடசாலையும் வருடந்தோறும் இந்த உதவிப்பணத்தைப் பெற்று வருகின்றது. எமது தமிழ்ப்பாடசாலை ஆற்றுகின்ற சேவைகளை விளக்கி 2021 ஆம் ஆண்டிலிருந்து இந்த உதவிப்பணத்தை அதிகரித்து 250 டொலர்களாக வழங்குமாறு நியூ சவுத் வேல்ஸ் மாநில முதலமைச்சர் கௌரவ கிளாடி பெரியிக்கிலியன் அவர்களுக்கு கிளாடி@ஜிமெயில்.காம் என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு மின்னஞ்சல் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 14 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. வாணி விழாவில் கல்வியா? செல்வமா? வீரமா? சிறந்தது என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. நீங்கள் கல்வியே சிறந்தது என்ற தலையங்கத்தில் உரையாற்றவுள்ளீர்கள். அதற்காக நீங்கள் தயாரித்த பேச்சு

2. நான் கண்ட மகிழ்ச்சியான கனவு

3. தந்தையர் தினம்